# ஈழத்தில் நாவல்களைத் தழுவி எழுந்த முழுநீளத் தமிழ்த் திரைப்படங்கள்

**கவினயா, தே., ரகுராம், சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
kavinaya1412@gmail.com

*திரைப்படம் ஒன்றிற்குத் திரைக்கதை என்பது முக்கியமானதொன்றாகும். சமூகத்தில் இருந்தும் சமூகத்தளத்தில் உருவாகும் படைப்புக்களில் இருந்தும் திரைப்படங்களுக்கான திரைக்கதைகள் பெற்றுக் கொள்ளளப்படுகின்றன. அந்தவகையில், சமூகத்தளத்தில் உருவாகும் நாவல்கள் திரைக்கதைகளுக்கான முக்கிய தோற்றுவாய்களாகின்றன. நாவல்கள் விபரிப்புத் தன்மை கொண்டனவாகவும் நாவல்களை வாசிக்கும் வாசகர் மனத்தில் காட்சிப் படிமங்களைத் தோற்றுவிக்கும் முகமாகவும் அமைந்திருப்பதால் அவற்றிலிருந்து திரைப்படத் தினைத் தயாரிப்பது என்பது பல சமயங்களில் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தி இருக்கிறது. ஈழத்துத் தமிழ்த் திரைப்படத்துறையிலும் இவ்வாறான போக்குக் காணப்படுகிறது. எழுத்து வடிவில் உள்ள அனைத்தையும் காட்சிகளாகக் கொண்டுவர இயலாத போதும் நாவல்கள் எவ்வாறு திரைப்படங்களாகத் தயாரிக்கப்படுகின்றன என்பது ஆராயப்படவேண்டியதாகிறது. இவ்வாறு எழுத்து வடிவம் கொண்ட நாவல்கள் காட்சி வடிவம் கொண்ட திரைப்படங்களாக நகர்கையில், இரண்டு வெவ்வேறுபட்ட ஊடகங் களுக்கு இடையிலான இயல்புகள், பாத்திர உருவமைப்பு, பாத்திர எண்ணிக்கை, மொழிநடை, கதைக்களம், கதைக்கரு, காட்சிப்பிரிப்பு, கதைச்சுருக்கம், திருப்புமுனைகள், கதையின் ஆரம்பம் மற்றும் முடிவு, ஒத்ததன்மைகள்/ஒவ்வாத தன்மை போன்றவற்றை ஈழத்துத் தமிழ்த் திரைப்படத்துறைக் களத்தின்வழி ஆராயும் பொருட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. நாவல்கள் திரைப்படங்களாக மாறுகையில் நாவல்களின் இயல்புகள், கோட்பாடுகள், தனித்துவங்களுடன் திரைப்படக் காட்சிப் படிமங்கள் எவ்விதம் துணைபோகின்றன? ஈழத்தில் நாவல்களைத் தழுவி எழுந்த திரைப்படங்கள் அந்தந்த நாவல் களின் படைப்பாக்கக் குறிக்கோள்களுடன் ஒத்துப்போகின்றனவா? அல்லது அவற்றைச் சிதைக்கின்றனவா? போன்ற கேள்விகளுக்கு விடை காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். தணியாத தாகம் நாவல் (1971) - குத்துவிளக்குத் திரைப்படம் (1972), பொன்மணி எங்கே போனாள் நாவல் (1970) - பொன்மணி திரைப்படம் (1977), வாடைக்காற்று நாவல் (1973) - வாடைக்காற்று திரைப்படம் (1978), ஷாமிலாவின் இதயராகம் நாவல் (1987) - ஷர்மிலாவின் இதயராகம் திரைப்படம் (1993) போன்ற நாவல்களும் திரைப்படங்களும் ஆய்வுப்பரப்பாக எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும் மூலப் பிரதிகள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் குத்துவிளக்கு மற்றும் ஷர்மிலாவின் இதயராகம் ஆகிய திரைப்படங்கள் மாத்திரமே ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இவ்வாய்வானது ஒப்பீட்டு அடிப்படையில் அமைந்த எண் சார்ந்த மற்றும் பெறுதி சார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்தில் நாவல்களைத் தழுவி எழும் முழுநீளத் தமிழ்த் திரைப்படங்கள் நாவல்களில் கூறப்பட்டுள்ள கதைச்சுருக்கம், கதைக்கரு, கதை ஆரம்பம், கதைமுடிவு, கதைத்திருப்பம், பாத்திர எண்ணிக்கை, பாத்திரக் கட்டமைப்பு கதைக்களம் போன்ற பெருமளவான விடயங்களை அப்படியே காட்சி வடிவமாக்கியுள்ளன என்பது ஆய்வின் முடிவாகக் கண்டறியப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள் :** ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்கள், நாவல்கள், காட்சி வடிவமைப்பு, திரைப்படத் தழுவல்